*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

# தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

https://tamilmanam.in/

Issue DOI: https://doi.org/10.63300/tm07032026

# Centring on the Elements of Tolkappiyam Poetry : 'Yappu' and 'Porul'

**Mr. R. Kannadhasan*,**

PhD. Research Scholar, (Full Time), Subramania Bharathi School of Tamil Language and Literature, Pondicherry University, Puducherry – 605014.
*Correspondence: Kannadhasanravi7@gmail.com,

**Article Info**
Received on 20-Feb-2026, Revised on 25-Feb-2026, Accepted on 25-Feb-2026, Published on 01-Mar-2026

## ABSTRACT

*Tolkappiyam identifies 34 types of elements in verse. Of these, the first 26 belong to isolated verses, while the remaining 8 pertain to continuous verses. P. Madhaiyan argues that poetry is the centre of the entire Tolkappiyam, and this study similarly aims to establish it as the core of material poetry. Commentators who followed Tolkappiyar offered various classification methods. This article also examines the approaches taken by specific commentators (Ilampuranar, Perasiriyar, Nachinarkiniyar, A. Sivalinganar, Ka. Vellaivaranar, Tamizannal, Sa. Balasundharam) and scholars (S.N. Kandhasamy, S.V. Shanmugam, T.P. Meenatchisundaranar, Indira Manual, Anni Thomas, K. Pazhanivelu, R. Sampath).*

*This paper focuses on verse and commentary related to Sound, Eight Feelings, Thina, and Sa. Balasundharam's analysis. Sound creates structure and meaning alike. It serves as a common factor across all examples. Sound, Eight Feelings, and Thina have been applied to the Marutha Kali. The Kali song features a natural bouncing sound. There are also attempts to derive explanations using measurements (alapedai). If we consider form and meaning as common elements, sound emerges as the primary force shaping both. Thus, sound and its meanings form the foundation of this study. Sound creates structure and meaning alike. The next step in this study is to explore how sound represents meaning.*

***KEYWORDS:*** *Tolkappiyam Poetry, Tolkappiyam Verse Elements, Structure, Sound, Meaning.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

# தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள் ‘யாப்பு’ - ‘பொருள்’ என்னும் உறுப்புகளை மையமாக வைத்து

***இர. கண்ணதாசன்,** முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி-14

**ஆய்வுச் சுருக்கம் (Abstract)**

தொல்காப்பியச் செய்யுளியல் முப்பத்தி நான்கு வகையான செய்யுள் உறுப்புகளை அறிமுகம் செய்கின்றன. அதில் முதல் நிலையில் வரக்கூடிய இருபத்தாறு உறுப்புகளும் தனிநிலைச் செய்யுளுக்கு உரியதாகும். ஏனைய எட்டு உறுப்புகளும் தொடர்நிலைச் செய்யுளுக்குரியதாகும். பழந்தமிழ்க் கவிதை மரபில் இம்முப்பத்தினான்கு உறுப்புகளும் இருந்திருக்கக்கூடும். அவற்றினைத் தனித்தனிக் கூறுகளாக அறிமுகம் செய்தும், விளக்கியும் காட்டுகிறது தொல்காப்பியச் செய்யுளியல். அச்செய்யுளியலே ஒட்டுமொத்த தொல்காப்பியத்திற்கும் மையமாகத் திகழ்கிறதென்றும், ஏனைய இயல்களோடு இணைவுத்தன்மைப் பெற்றிருக்கிறதென்றும் பெ.மாதையன் தொல்காப்பியச் செய்யுளியலும் மைய ஈர்ப்பும் என்ற கட்டுரையில் விளக்குகிறார். அவ்வாய்வுக் கட்டுரையைப் பின்பற்றி முதல் 26 உறுப்புகளில் ‘யாப்பு’ - ‘பொருள்’ ஆகிய உறுப்புகள் மையமாக அமைகிறதா? என்பதை இக்கட்டுரை ஆராய உள்ளது. செய்யுளியல் உரையாசிரியர்களும் (இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், ஆ. சிவலிங்கனார், க. வெள்ளைவாரணர், ச. பாலசுந்தரம், தமிழண்ணல்) செய்யுளியல் ஆராய்ச்சியாளர்களும் (சோ.ந. கந்தசாமி, செ. வை. சண்முகம், தெ.பொ.மீ, இந்திராமனுவேல், அன்னிதாமசு, கே.பழனிவேலு, இரா.சம்பத்) பல்வேறு கோணங்களில் செய்யுள் உறுப்புகளை வகைதொகைப் படுத்திச் செல்கின்றனர். இதில் ச. பாலசுந்தரத்தின் உரையும் தூக்கு, மெய்ப்பாடு, திணை ஆகிய உறுப்புகளும் மருதக் கலியில் பொருத்தியதில் தூக்கு என்னும் உறுப்பு யாப்புறுப்பாகவும் பொருளுறுப்பாகவும் செயல்படுவதைப் பார்க்கமுடிகின்றன. மேலாய்வாக தூக்கும் பாடுபொருளும் என்கிற கோணத்தில் பார்க்கபட வேண்டும் என்பதையும் இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

**திறவுச் சொற்கள்:** தொல்காப்பியக் கவிதையியல், தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள், யாப்பு, தூக்கு, பொருள்.

**முன்னுரை**

தொல்காப்பியர் செய்யுளியல் முதல் நூற்பாவில் செய்யுளீட்ட பயன்படும் உறுப்புகள் 34 என சுட்டுவர். அவையே அம்முப்பத்தினான்கு உறுப்புகளுள் முதல் 26 உறுப்புகள் ‘யாப்பியல்’



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

சார்ந்ததாகும். மீதமுள்ள எட்டு உறுப்புகளும் வனப்புகள் சார்ந்ததாகும். பழந்தமிழ்க் கவிதை மரபில் இம்முப்பத்தினான்கு உறுப்புகளும் இருந்திருக்கக்கூடும். அவற்றினைத் தனித்தனிக் கூறுகளாக அறிமுகம் செய்தும், விளக்கியும் காட்டுகிறது தொல்காப்பியச் செய்யுளியல். அச்செய்யுளியலே ஒட்டுமொத்த தொல்காப்பியத்திற்கும் மையமாகத் திகழ்கிறதென்றும், ஏனைய இயல்களோடு இணைவுத்தன்மைப் பெற்றிருக்கிறதென்றும் 'பெ.மாதையன்' "தொல்காப்பியச் செய்யுளியலும் மைய ஈர்ப்பும் " என்ற கட்டுரையில் விளக்குகிறார். அவ்வாய்வு கட்டுரையைப் பின்பற்றி முதல் 26 உறுப்புகளில் 'யாப்பு' - 'பொருள்' ஆகிய உறுப்புகள் மையமாக அமைகிறதா? என்பதை இக்கட்டுரை ஆராய உள்ளது. மேலும் உரையாசிரியர்களும் , அறிஞர்களும் தொல்காப்பியரைப் பின்பற்றி அவரவர் கோணங்களுக்கேற்ப பல்வேறு வகைகளில் 34 உறுப்புகளைப் பிரித்தளிக்கின்றனர். உரையாசிரியர்களிலிருந்து ஒருவரின் பிரிப்பு முறையும் யாப்பு வகையுள் ஒன்றான பாட்டிலிருந்து ஒரு வகையையும் எடுத்துக்கொண்டு அவற்றுள் 'யாப்பு' - 'பொருள்' முதலிய உறுப்புகளோடுப் பொருத்திப்பார்க்கவுள்ளன. யாப்புறுப்பும் (பாட்டு) பொருளுறுப்பும் ஏனைய உறுப்புகளுக்கு மையமாக அமைகிறதா என்பதை ச. பாலசுந்தரம் உரையும் பாட்டு வகையுள் கலிப்பாவும் எடுக்கவுள்ளன. அவ்வுரையாசிரியர் கருவி, செய்கை, பொருள் என முதல் 26 உறுப்புகளை மூன்று வகைகளாக பிரிப்பர். அதில் யாப்பு என்னும் உறுப்பு பொருள் வகையுள் வரும். 'பொருள்' என்னும் உறுப்பு செய்கை வகையுள் வரும். மருதக்கலியிலிருந்து 70, 74, 87 ஆகிய பாடல்களும் ச. பாலசுந்தரம் அளிக்கும் மூன்று வகையிலிருந்து ஒரு உறுப்பு வீதமும் (தூக்கு, மெய்ப்பாடு, திணை) என்ற கணக்கில் மருதக்கலிப் பாடல்களோடுப் பொருத்திப்பார்த்து செய்யுளீட்டுவதற்கு யாப்பும் பொருளும் ஏனைய உறுப்புகளுக்கு பொதுத்தன்மையானது என நிறுவ முயற்சிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**செய்யுள் விளக்கம்**

பதிற்றுப்பத்து புலவர் அரிசில் கிழார் 73 வது பாடலில் **"விளைவயல் செய்யுள்"** என்கிற சொல்லாட்சியைப் பயன்படுத்துகிறார். அதற்கு உரையாசிரியர் அளித்த விளக்கமாவது செய்யுள் என்னும் சொல் 'நன்செய்' என்னும் வயலைக் குறிக்கும். உடல் உழைப்புச் செலுத்துமிடம் வயல், மன உழைப்புச் செலுத்துமிடம் செய்யுள் எனவாகும்.**(அ. ஆலிஸ்.,2004,ப.262)** ஆறு வகையான உறுப்புகளினால் ஏற்படும் சொற்செறிவும், பொருட்செறிவும் அமையப்பெற்ற தொடையின்பமும், நடையின்பமும் ஆகிய ஓசை நயத்துடன் செய்யப்படுவது 'செய்யுள்' என யாப்பதிகாரத்தில் புலவர் குழந்தை வரையறைச் செய்கிறார். என்பதை இரா. சம்பத் இருபதாம் நூற்றாண்டு தமிழ் மரபுக்கவிதை யாப்பியல்: மரபும் நெகிழ்வும் என்ற நூலில் எடுத்தாண்டதன் வழி தெரிய வருகிறது.



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

**(இரா. சம்பத்.1998.ப.16)** உயிருக்கு உடல் போலும், பொருளுக்குப் பல சொற்கள் போலும், உணர்வுகளுக்குச் செய்யுள் போலும் அவ்வுணர்வுகளைக் கல்வியறிவுக் கொண்டு செய்வது செய்யுளாகும் என நன்னூலார் கருத்தென்று சங்கரநமசிவாயர் உரைப்பர். (நன் – பெய – 268) எழுத்து சொற்பொருள்களாற் செய்யப்படுவது செய்யுளாம். அவை அமைந்த செய்யுள் பற்றிய இயல் ஆதலின் செய்யுளியல் என்னும் பெயர்த்தாயிற்று எனச் சிவலிங்கனார் செய்யுளியலுக்கு வரையறைச் செய்கிறார். **(ஆ.சிவலிங்கனார், 1997, ப.27)** முன்னோர் காட்டிய இலக்கண மரபு நெறிப்படி ஆக்கம் பெறும் பாட்டு இலக்கிய வகையே செய்யுளெனப்படும்.

**தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள்**

சிதறிக் கிடக்கும் தரவுகளை ஒன்றிணைப்பதும், ஒன்றிணைத்த தரவுத் தொகுப்புகளை வகைநிலைப்படுத்துவதும் ஒரு ஆராய்ச்சிக்கு அடிப்படையாய் அமைகிறது. இவ்வாறாக செய்யுளாக்க உறுப்புகளைத் தொல்காப்பியர் 34 ஆகத் தொகுத்தளிப்பர். அவற்றுள் யாப்பியல் தொடர்பான உறுப்புகள் 26 மாத்திரை முதல் வண்ணமோடு வரக்கூடியதாகும். இவ்வுறுப்புகளோடு எண்வகை வனப்பு சேர்ந்த 34 உறுப்புகள் செய்யுளுக்குள் 2 வகைகளாகவும் முழுத் தொகுப்பாகவும் கொண்டுவரப்படுகின்றன. அதுவே நல்லிசைப் புலவர் செய்யுள் எனப்படும். ஏழு நிலத்தெழுந்த செய்யுளுள் ‘பாட்டு’ என்றவற்றிற்கு மட்டும் இவை பொருந்தும். ஏனையவற்றிற்கு இது பொருந்தாதென்று பேராசிரியர் உரை வழி அறியமுடிகின்றன. பேராசிரியரைத் தொடர்ந்து 26 உறுப்புகளும் தனிநிலைச் செய்யுளுக்கு உரியது, ஒரு உறுப்பு இன்னொரு உறுப்புக்குத் தொடர்புடையதாய் வரும். எண்வகை வனப்பு பல செய்யுள்கள் தொடர்ந்து ஆக்கம் பெறுகிற போது அவ்வனப்புகள் உறுப்பாய் வரும், தனியாகவும் கூட்டாகவும் வரும் என்று நச்சினார்க்கினியர் உரைப்பர். மேற்கூறிய உரையாசிரியர்களுக்கு முன்னர் இளம்பூரணர் “செய்யுள் உறுப்புகள் அனைத்தும் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மாத்திரை முதலான 34 உறுப்புகளும் செய்யுளுக்குரிய உறுப்புகளாகும். அவற்றுள் பிற்கூறிய எட்டும் மேற்கூறிய இருபத்தினாறினோடும் ஒரு நிகரன அன்மையின், வேறு தொகை கொடுக்கப்பட்டது. அவை யாமாறு தத்தந் சூத்திரத்துக் காட்டுதும்.” இவ்வாறக இளம்பூரணர் உரைத்தவற்றிலிருந்து குறிப்புகளாக ஆ.மணி “பிற்கூறிய எட்டும் அம்மை முதலிய எண்வகை வனப்புகள் மேற்கூறிய இருபத்தாறாவன மாத்திரை முதல் வண்ணம் ஈறாகவுள்ள செய்யுளுறுப்புகள் இவை இருபத்தாறும் தனிநிலைச் செய்யுட்கு இன்றியமையாதனவாகவும், பிற்கூறிய வனப்புகள் எட்டும் தனிநிலைச் செய்யுட்கள் பல தொடர்ந்தமைந்த தொடர்நிலைச் செய்யுட்குரியனவாகவும் ஒரு நிகரன அன்மையின் என்கிறார்.**(ஆ.மணி.,2022.ப.41)**


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

இளம்பூரணர் குறிப்பாகவும், பேராசிரியர், க. வெள்ளைவாரணார், நச்சினார்க்கினியர், போன்றோர்களின் உரை விளக்கியுரைக்கும் தன்மையாகவும் அமைகிறது. ஆ. சிவலிங்கனார் செய்யுள் என்பதை வரையறைச் செய்வர் மற்றும் செய்யுள் உறுப்புகள் எவ்வித வகைபாடுமின்றி 34 என்றுரைப்பர். தமிழண்ணல் செய்யுள் உறுப்புகளின் இயல்புகளைக் கூறித் தொகுத்தளிப்பர். ச.பாலசுந்தரம் "இவ்விருபத்தாறும் அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என மேலனவற்றோடு பொருந்தக்கூறிய இவ்வெட்டு உறுப்புகளோடு கூடி முப்பத்தினான்கும் நல்லிசைப் புலவர் செய்யும் உறுப்பெனக் கூறி வகுத்துரைத்தனர் இலக்கண நூலோர்" என்கிறார். மேலுமவர் எழுத்து, அசை, சீர், அடி, தூக்கு, தொடை, அளவு, மாட்டு, மரபு ஆகிய ஒன்பதும் கருவி பற்றிய உறுப்புகளாகும், மாத்திரை, நோக்கு, பா, மெய்ப்பாடு, வண்ணம், எச்சம், முன்னம், பொருள்வகை, துறை ஆகிய ஒன்பதும் செய்கைப் பற்றிய உறுப்புகளாகும். திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், யாப்பு ஆகிய எட்டும் பொருள் பற்றிய உறுப்புகளாகும். முதல் 26 உறுப்புகளை மூன்று வகையாக பிரிப்பர். **(ச.பாலசுந்தரம்., 2012, பக். 1-3)**

**அறிஞர்களின் பகுப்பு முறை**

சோ.ந.கந்தசாமி புறத்துறுப்புகள், (அதனுள்ளே எஞ்சியப் புறத்துறுப்புகள்), அகத்துறுப்புகள், பொருள்புலப்பாட்டு உறுப்புகள், வனப்புகள் என நான்காகப் பிரிப்பர். செ.வை. சண்முகம் கருத்தாடல், சூழல், பேசும் முறை, கருத்து தெரிவிக்கும் முறை, புரிந்து கொள்ளும் முறை, கருத்தாடலின் நோக்கம், யாப்பு, பாடுபொருள், வாசிப்போர், அகத்திணையியல் பொருளியல் என 34 உறுப்புகளைப் பல்வேறு கோணங்களாக பகுத்தளிப்பர். தெ.பொ.மீ கவிதையின் இசை, எண்ண அலைகள், கவிதையின் உயிர் எனவாக பிரிக்கிறார். இந்திராமனுவேல் முதல் 12 உறுப்புகள் வடிவம் சார்ந்தது என்றும், அடுத்த 13 உறுப்புகள் பொருள் சார்ந்தது என்றும், வண்ணம் ஒலிகள் திருப்புரையாக அமைத்து சந்த வேறுபாடுகளை உணர்த்துவதால் மிகுதியும் வடிவம் என்றும் பகுத்துள்ளார் அவரே மொழியியல் நோக்கில் ஒலிநிலை, சொல்நிலை, தொடர் நிலை என்று வேறொருக் கட்டுரையில் பிரித்திருப்பர். அன்னிதாமசு 26 உறுப்புகளையும் செய்யுளின் வடிவ அமைப்பு, உட்பொருளமைப்பு எனவாக வகைபடுத்துகிறார். இவ்வாறாக பல்வேறு பிரிப்பு முறைகளைத் "தொல்காப்பியச் செய்யுளியல் – முழுப்பார்வை" என்கிற கட்டுரையில் செ.வை. சண்முகம் குறிக்கிறார். **(செ.வை.சண்முகம்.,2015,பக்.548-551)**

கே. பழனிவேலு "செய்யுளியல் உறுப்புகளை கவிதையின் இலக்கண அமைப்பு அல்லது உருவம், கவிதையின் பாடுபொருள், கவிதையை வெளிப்படுத்தும் நோக்குநிலை , கவிதையின்


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

சூழல், கவிதையைப் பொருள் கொள்ளும் முறை, கவிதையியல் அழகியல் தன்மை என வகைபடுத்தியுள்ளார்". **(கே. பழனிவேலு,2018,ப.47-48)** இவ்வாறாக தொல்காப்பியச் செய்யுளியல் பல நிலைகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் யாப்பாய்வுகள் தனிநிலை ஆய்வு, ஒப்பாய்வு, வரலாற்றாய்வு என மூன்று நிலைகளில் நிகழ்கிறதென்கிறார் ய. மணிகண்டன். அவர் காரிகையை மையமாக வைத்து அதற்கு முன்னெழுந்த யாப்பு நூல்களும், பின்னாளில் தோன்றிய யாப்பு நூல்களும் எவ்வாறு தோற்றம் பெற்று வளர்ச்சியுற்றன என்பதை வரலாற்றாய்வாக நிகழ்த்தியுள்ளார். சோ.ந. கந்தசாமி யாப்பாய்வினை வரலாறு மற்றும் ஒப்பாய்வு நோக்கில் ஆராய்ந்துள்ளார். மற்றும் தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகளை ஆராய்ந்த செ.வை.சண்முகம் மொழி சார் திறனாய்வு முறையிலும் தெ.பொ.மீ இசையை முன்னிலைப்படுத்தியும் இந்திராமனுவேல், அன்னிதாமசு போன்றோர் வடிவம் பொருள் என்ற நோக்கில் ஆராய்ந்துள்ளனர். கே. பழனிவேலு எடுத்துரைப்பு திறனாய்வு நோக்கில் ஆராய்ந்துள்ளார். மேலும் தொல்காப்பியக் கவிதையியல் வடிவம், பாடுபொருள், உத்தி, வகைமை என்ற நூலினை இரா. சம்பத் பல அறிஞர்களிடமிருந்து கட்டுரைப் பெறப்பட்டுத் தொகுப்பாக வெளியிட்டுள்ளார். எனவே அறிஞர்களின் ஆராய்ச்சிக்கும் அவர்களின் கொள்கைகளுக்கும் ஏற்றாற்போல் மூல நூல் வழியமைத்து தந்திருப்பதைப் பார்க்கமுடிகின்றன.

அந்த வகையில் இவ்வாய்வும் சில பிரிப்பு முறைகளை முன் வைக்கின்றன.

| **தொல்காப்பியச் செய்யுள் உறுப்புகள் (34)** | | | |
|---|---|---|---|
| **யாப்பியல் (26)** | | | **எண்வகை வனப்பு (8)** |
| **வடிவ உறுப்புகள் (12)** | **பொருளடக்க உறுப்புகள் (13)** | **வடிவப் பொருள் உறுப்பு (1)** | அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு |
| மாத்திரை, எழுத்து, அசை, சீர், அடி, மரபு, தூக்கு, தொடை, நோக்கு, பா, அளவியல், வண்ணம் | திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், | யாப்பு | |


தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

| | | | |
|---|---|---|---|
| | முன்னம், பொருள், துறை, மாட்டு | | |

**தொல்காப்பியரின் யாப்பும் , வகைகளும்**

“எழுத்து முதலாக அசை, சீர், அடி என ஈண்டோதப்பட்ட அடியினாற்றான் குறித்தப்பொருளை யிறுதியடியளவு முற்றுபெற நிறுத்துதல் யாப்பென்று சொல்லுவர் புலவர் என்றவாறு இளம்பூரணர் உரைப்பர்”. **(சிவ.செய்.74)** “பாட்டும் உரையும் நூலும் வாய்மொழியும் பிசியும் அங்கதமும் முதுசொல்லும் ஆகிய அவ்வேழு வகை இலக்கியத்தின் கண்ணும் வன்மையாற் புகழ்சான்ற வேந்தர் மூவரின், தண்ணிய உலகத்திடத்து வடக்கே வேங்கடமலையும் தெற்கே குமரியாறும் கிழக்கும் மேற்கும் கடலுமாகிய நான்கு பெரிய எல்லைக்குள் வாழும் தமிழ்ச் சான்றோர்கள் வழங்கும் செய்யுள் வழக்கு மேற்கூறிய யாப்பின் வழியதாகும் என்று கூறுவர் புலவர்”. **(பால.செய்யு.79)** இவ்வேழு வகையான யாப்புகளுள் முதலாவதாக இருக்கும் பாட்டு என்னும் வகைமைத் தன்னிச்சையாகவும், சேர்ந்தும் இரு பிரிவுகளாக இயங்கும். அதுவே தனிநிலைப்பாக்கள் , கலப்பு வகைப் பாக்கள் எனவாகும், தனிநிலையில் அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா போன்றவை அடங்கும். கலப்பு நிலையில் பரிபாவும், மருட்பாவும் அடங்கும்.

**தொல்காப்பியரின் பொருள்**

**(தொல்.1464)** என்ற நூற்பாவிற்கு தமிழண்ணல் தரும் விளக்கம் பின்வருமாறு “பாடலின் அடிக்கருத்து உரிப்பொருள். மாந்தரது காதல் வாழ்வும் உலக வாழ்வும். அகப்பாடலில் முதலும் கருவும் உரிக்கேற்ற இயற்கைப் பின்புலம். மற்றபடி பாடலில் பொதிந்துள்ள துணைப் பொருள்கள் பலவாகும். அவை பொதுவாகப் பாட்டின் பொருள் அல்லது உள்ளடக்கம் எனப்படும். புலவனது கற்பனை எல்லாப் பாடல்களிலும் இடம் பெறும். பொதுவான கற்பனைகள், வர்ணனைகள், விளக்கங்கள் போல்வன எல்லா வகைப் பாக்களுக்கும் உரியன. இன்பமும் துன்பமும் புணர்வும் கூடுதலும் பிரிவும் ஒழுக்கமும் என அறக்கருத்துகள் சிறிதும் குற்றப்படாது பாடப்படும். இது இத்திணைக்கு உரிப்பொருள் என்று வரையறைப்படாது, பொதுவாக வருவன யாவும் பாட்டின் பொருளடக்க வகைகள் எனப்படும். பாட்டுப் புனைபவன் திறமைக்கேற்பப் பரந்துபட்டு வருவன இவை. அகம் புறம் என்பது எனாது பொதுவான பாடல்களும் பாடப் பெற்றிருக்க வேண்டும்.” **(தமிழண்ணல், 2003, ப.116)**

**மையம்: யாப்பும் பொருளும்**

ச. பாலசுந்தரனாரின் கருவி உறுப்புகளுள் தூக்கு, செய்கை உறுப்புகளுள் மெய்ப்பாடு



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

பொருள் உறுப்புகளுள் திணை ஆகிய உறுப்புகள் யாப்பு – பொருள் உறுப்புகளோடுப் பொதுதன்மையில் அமையப்பெறுகிற கூறுகள் எவையென்பதையும் மேலும் மருதக்கலிப்பாடல்களில் அவை எங்ஙனம் பொருந்தி வருகிறது என்பதையும் ஆராய வேண்டியுள்ளது. **யாப்பு என்பது பாட்டு, பொருள் என்பது அப்பாட்டில் பயின்று வரும் விளக்கமாகும். இவற்றுள் வரும் பொதுத்தன்மையே மையமாகும்.**

**கலிப்பாவின் பொதுவிலக்கணம்**

நிரை முதல் வெண்சீர் முதலாவதாகவும் பிற சீர்கள் அருகியும் வரும். நேர்யீற்று இயற்சீரும், நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீரும் கலிப்பாவில் வராது. கலிப்பா துள்ளலோசைப் பெற்று வரும். துள்ளுவதாவது ஒரே சீராக அமைகின்ற நடை இல்லாமல் நடுவில் உயர்ந்தும் தாழ்ந்தும் ஒலிக்கின்ற நடையை உடையது. இந்த வோசையை இளம்பூரணர் கன்றுகுட்டித் துள்ளி ஓடுவது போன்றது எனக் குறிப்பிடுவர். 13, 20 எழுத்துக்களை உடைய நாற்சீர் அளவடியும், நெடிலடியும், கழிநெடிலடியும் வரும். அடிஎதுகை, பொழிப்பு, ஒரூஉ ஆகிய தொடைகள் மிகுதியாக வரும்.

**கலிப்பாவின் வகைகள்**

கலிப்பா 3 வகைப்படும் 1. ஒத்தாழிசைக் கலிப்பா, 2. கலிவெண்பாட்டு,3. கொச்சகக் கலி எனவாகும். ஒத்தாழிசைக் கலிப்பா மூன்று வகைகளைப் பெற்றிருக்கும். கலிவெண்பாட்டு இரு வகைகளை உள்ளடக்கியிருக்கும், கொச்சகக் கலிப்பா ஐந்து வகைகளைப் பெற்றிருக்கும்.

**தூக்குறுப்பு வெளிப்படுத்தும் யாப்பும் பொருளும்**

கருவி உறுப்புகளுள் ஒன்றான 'தூக்கு' என்னும் உறுப்பைக் கலித்தொகை 70 வது பாட்டில் பொருத்திக் காணுகையில் "நீரின் கண் சேவலன்னமும், அன்னப்பெடையும் விளையாட்டில் ஈடுபட்டன, தாமரை இலைகளுக்கு நடுவில் சேவலன்னம் மறைந்தன. அன்னப்பெடை சேவல் காணததால் கலங்கியது. அறியாமையுடைய அப்பெடை முழுமதியின் நிழலை நீரில் கண்டது. அதனை சேவலெனக் கருதி உவந்து ஓடிச் சென்றது, அந்நிலையே தன்னை சேருவதற்கு எதிரே வருகின்ற சேவலைக் கண்டு மிகவும் நாணி பல மலர்கள் செறிந்துள்ள இடத்திற் போய் ஒலிந்து கொண்டது. இத்தகு பழன நிலம் சூழ்ந்த ஊரனே! நான் கூறுவனவற்றைக் கேள்". **(அ.விசுவநாதன்.,2004,ப.298) "துன்னத்தன் னெதிர் வரூஉம் துணைகண்டு மிகநாணிப்" (கலி.70)** இவ்வடிக்கு முன்னும் பின்னும் நாற்சீர் கொண்ட அடிகளாகவும் இயற்சீர்கள், வெண்பா உரிச்சீர்கள் ஏற்று வந்த நிலையில் 'துன்னத்தன் என்ற அடியில் தனிசொல்லாக 'னெதிர்' என்ற சீரும் அதனைத் தொடர்ந்து 'வரூஉம்' என்ற சீர் அளபெடையாக வருவதால் ஓசை நீட்டத்தை உணர முடிகிறது. **"துள்ள லோசை கலியென மொழிப" (பால.செய்.83)** அவ்வடிக்குரிய ஓசை



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

கலிப்பாவின் இலக்கணத்திற்குப் பொருந்தி வருகின்றன. அதே அடியில் புலவர் குறிப்பிட விரும்பிய பொருளாகவும் அஃது இருக்கக்கூடும். எனவே யாப்புறுப்புக்கு பொருளுணர்த்தும் வடிவம் 'தூக்கு' என்னும் உறுப்பின் கண் செயல்படுகிறது. 'துன்னத்தன்' என்ற அடியில் 'வரூஉம்' என்ற சீர் பொருளுணர்த்தும் வடிவமாகவும் ஓசைமாற்றம் தரும் அளபெடையாகவும் புலவர் அமைத்திருப்பது பாட்டை ஓதுவோர் பொருளுணர்ந்து ஓத வேண்டும் என்ற காரணத்திற்காக கூட அமைத்து இருக்கலாம்.

**மெய்ப்பாடு உணர்த்த்தும் யாப்பும் பொருளும்**

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகியன எண்வகை மெய்ப்பாடுகள் ஆகும். இவ்வெட்டும் நான்கு நிலைகளன்களாகக் கொண்டு 32 இடங்களில் தோன்றும். அவற்றுள் அச்சம் என்னும் மெய்ப்பாடு அணங்கு, விலங்கு, கள்வர், இறை ஆகிய நிலைகளன்களில் வரும். கலித்தொகை 87 வது பாடலில் தலைவி தன் நெஞ்சோடுக் கூற்றுரைக்கையில் முதல் இரண்டடிகளில் அந்த பாட்டின் மொத்த பொருளும் அச்சம் என்கிற மெய்ப்பாட்டின் வழியாக புலப்பட்டுவிடுகிறது.

**"ஒருஉம் நீஎம் கூந்தல் கொள்ளல் யான்நின்னை வெரூஉதும் காணுங் கடை." (கலித்.87)**

யாம் நின்னைக் காணுமிடத்து அஞ்சுகின்றோம் ஆதலால் நீ என் கூந்தலைத் தீண்டாதே கொள், நீ நீங்குவாயாக என்றால் தலைவி **(அ.விசுவநாதன், 2004, ப.347)** மெய்ப்பாடு அச்ச வகைக்கு தலைவன் காரணமாக அமைகிறான். "இது தலைவனைக் கள்வனாகக் கூறிய நிலையில் அச்சம் பிறந்தது. அவ்வச்சம் பிறிதுபொருள் பற்றியே வரும்." என ச. திருஞானசம்பந்தர் சுட்டுவர்.

தலைவன் பரத்தை வீட்டிற்குச் செல்லுவதைத் தலைவி பார்க்கிறாள் அதனால் அச்சம் ஏற்படுகிறது. தலைவன் தலைவியை விட்டுப் போக வேண்டும் என்பது இப்பாட்டின் பொருளாகும். அச்சம் என்ற மெய்ப்பாடு 'கள்வர்' என்னும் நிலைகளனில் தோன்றி பொருள் முடிந்ததைப் பார்க்கமுடிகிறது. அப்பாட்டினுள் 'கள்வர்' என்றப் பொருளினை விளக்குவதற்காக சில முயற்சிகளை புலவர் எடுத்திருக்கக் கூடும். அஃது கலிப்பாட்டின் ஓசை ஒழுங்கு பெறுவதற்கும் பாடுபொருளினை உணர்த்துவதற்கும் "வெரூஉதும்" என்ற சொல் கள்வரைக் குறிக்கும் அளபெடை பொருளாக பயன்படுத்திருக்க வேண்டும். அதே சமயத்தில் புலவர்கள் பாக்களுக்கு ஏற்ப தேர்ந்தெடுக்கப்பட்ட சொற்களைப் (Selective Words) பயன்படுத்தியிருப்பவையும் தெரிய வருகின்றன. அச்சொல்லே 'அச்சம்' என்ற மெய்ப்பாட்டு நிலைகளன்களுள் ஒன்றான 'கள்வர்' என்ற சொற் பொருண்மைகாக அவ்வளபெடை தொடர்புத் தன்மைப் பெற்றிருப்பதும் அறியமுடிகிறது.

**திணைக் காட்டும் யாப்பும் பொருளும்**



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 03 (March -2026)*
**www.tamilmanam.in** *DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

அகத்திணை ஏழும் புறத்திணை ஏழும் முன்னர் கூறியது போல் முறையாகவும் புறனாகவும் அமையும். திணை உறுப்புக்குள் அடங்கும் என்கிறார் தொல்காப்பியர். கைக்கிளைக்குப் பாடாண் திணை முதலாக பெருந்திணைக்கு காஞ்சி வரையிலாக புறனாக அமையும். திணை என்னும் உறுப்பு அடுத்தடுத்த உறுப்புகளை ஒருங்கிணைத்து செல்கின்றது. முதல், கரு, உரி பொருள்கள் திணை என்னும் உறுப்பை அடையாளப்படுத்துகின்றது. "தலைவன் பரத்தையர் பலரை நுகர்ந்ததும், அமையாதவன் என்பது காமக்கிழத்தி முன் பகல், நன்பகல் பின்பகலில் வெவ்வேறான வருடனே புணர்ந்ததைச் சுட்டுதலினால் பெறப்படுகின்றது. பாகனும் பித்தேறினன். தேரும் பித்தேறியது என்று நகைச்சுவைப் பட கூறினள்". **(அ.விசுவநாதன்., 2004, ப.316)** இதிலிருந்து உரிப்பொருள் ஊடலென்று நேரடியாகத் தெரிகிறது. தலைவன் பல பரத்தையிடம் சென்று வந்தது தலைவிக்குத் தெரியாது போல நினைத்தான். ஏமாற்றியா விட்டேன் என்றுரைக்கிறான். அதற்குத் தலைவி நகைப்பட பேசுகிறாள் 'வயல் பூத்த தாமரை', கொய்குழை அகைகாஞ்சித் துறை, என மருதத் திணையின் கருப்பொருள்களாக தாமரை மலரும், காஞ்சி மரமும் பயின்று வந்துள்ளது. முதற்பொருளின் நிலம் வயல் வந்துள்ளதையும் பார்க்க முடிகிறது. அதே சமயத்தில் இப்பாட்டின் முதன்மையான பொருளாக தலைவன் பல பரத்தையிடம் சென்று வருவதை உணர்த்துவதற்காக மருதனிலநாகனார் பொய்கையிடத்தில் புதிய தேனை உண்டது, நெய்தல் பூவின் தாதினை மனம் பொருந்தி நுகர்ந்தது. வயலிடத்துப் பசிய இலையின், உடைய சேப்பங் கிழங்கை கை செய்து பண்ணினது போலப் பூத்த கருகிய இதழ்கள் நீங்கிய தாமரைப் பூவினது கொட்டையாகிய மாட்சிமை உடைய பதியிடத்தே தங்கியது. புலவரின் புனைவு பாடலில் உள்ள பொருளை உணர்த்துவதும் முதல், கரு, உரி பொருள்கள் பொருந்தி வருவதும் ஒப்பு நோக்கத்தக்கது. பல பரத்தைகளிடம் சென்று பின் தலைவனுக்குரிய தலைவியிடம் சேருகிறான் என்பதே இப்பாடலின் பொருள். அத்தலைவியிடம் தலைவன் சேருமிடத்தில் புலவர் 'படர்தரூஉம்' என்னும் அளபெடையைக் பொருளுணர்த்துவதற்காகவும் யாப்புக் கட்டமைப்பிற்காகவும் பயன்படுத்தியுள்ளார். ஏனைய அடிகளில் அளபெடை இல்லையென்பது குறிக்கத்தக்கது.

**முடிவுரை**

முதல்நிலை 26 உறுப்புகளுள் யாப்பும் பொருளும் ஏனைய உறுப்புகளுக்கு மையமாகத் திகழ்கிறதா என்கின்ற அடிப்படையில் ஆராய்ந்த இவ்வாய்வின் முடிந்த முடிபுகளாக மேற்கூறிய தூக்கு, மெய்ப்பாடு, திணை ஆகிய மூன்றினையும் 'யாப்பு' - 'பொருள்' ஆகிய உறுப்புகளோடுப் பொருத்திப் பார்த்தவற்றுள் மூன்று உறுப்புகளும் யாப்புறுப்புக்கு ஒரு அங்கமாய் திகழ்கிறது. ஆனால் பொருள் விளக்கத்திற்காக தூக்கு, மெய்ப்பாடு, திணை ஆகிய உறுப்புகள் பொதுவாக



தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், | Copyright © Author(s)

அமைந்திருப்பதைப் பார்க்க முடிகிறது. எடுத்துக்கொண்ட பாட்டு வகை கலிப்பா என்பதனால் ஓசையை நீட்டி ஒலிக்குமிடத்திலே 70,74,87 ஆகியப்பாடல்களுக்குரியப் பொருள்களையும் மருதக்கலிப் புலவர் விளக்கியுள்ளார். 'தூக்கு' என்னும் உறுப்பைப் பொருத்திப் பார்த்த 70 வது பாடலில் 'வரூஉம்' என்ற சீர் நேரடியாக ஓசைக்குரியப் பொருளைப் பெற்று வந்துள்ளதையும்; 'மெய்ப்பாடு' என்னும் உறுப்பைப் பொருத்திப் பார்த்த 87 வது பாடலில் 'வெரூஉதும்' என்ற சீர் அச்ச மெய்ப்பாட்டிற்குரிய பொருளாக வந்துள்ளதையும்; 'திணை' என்னும் உறுப்பை 74 வது பாடலில் 'படர்தரூஉம்' என்ற சீர் உரிப்பொருளுக்கு உரியதாய் வந்துள்ளதையும் பார்க்க முடிகிறது. எனவே பொருள் என்னும் உறுப்பு மையமாக வந்திருக்கிறது. 'குறித்தப் பொருளை முடிய நாட்டல்' என்று யாப்பு வரையறையின் படி முடிவு செல்லுமானல் அங்கேயும் பொருள் என்ற சொல்லே மேலோங்கி நிற்கிறது. அப்பொருள் மேலோங்கி நிற்க 'தூக்கு' என்னும் உறுப்பு கலிப்பாவின் ஓசையை நிலை நிறுத்துவதற்கு மருதனிலநாகனார் அளபெடை என்னும் சொற் பயன்பாட்டைப் பொதுத்தன்மையில் அமைத்திருக்கும் முயற்சி உற்றுநோக்கத்தக்கதாகும். இதிலிருந்து யாப்பு, பொருள் ஆகிய உறுப்புகளே மீதமுள்ள உறுப்புகளுக்கு மையமாக இருக்கும் என்பது இவ்வாய்வின் முடிபாகும். இவ்வாய்வு எடுத்துக்கொண்ட மூன்று உறுப்புகள் வழியாக அளபெடை சார்ந்த சொற்களின் பயன்பாடு ஓசையின் ஏற்ற இறக்கத்தை உண்டாக்குகிறது. அதுவே கலிப்பாவின் வடிவமாகவும் பொருளாகவும் அமைகின்றன. எனவே 'யாப்பு' - 'பொருள்' ஆகிய இரு உறுப்புகளும் மையமாக அமைந்திருந்தாலும் கூட பொருளுறுப்புக்கு இலக்கணம் கூறும் தொல்காப்பியர் வடிவ உறுப்புகள் பற்றி எதுவும் உரைக்காமல் பொருளுக்கானது என்றே உரைப்பர். ஆனால் யாப்புறுக்கு தொல்காப்பியர் வடிவ உறுப்புகளையும் பொருள் உறுப்புகளையும் பொருந்தி வருமாறு இலக்கணம் செய்திருப்பார். வடிவம் இல்லையெனில் பொருள் இல்லை. அந்நிலையில் வடிவ உறுப்பிற்கும் பொருளுறுப்பிற்கும் ஒருங்கிணைந்த வடிவப் பொருள் உறுப்பாய் யாப்புறுப்பு அமைகிறது. புலவர்கள் தூக்கு என்னும் உறுப்பை வைத்துக் கொண்டு பாடுபொருள் அமைக்கும் முயற்சியில் வெவ்வேறானச் சொற்கூறுகளை வெவ்வேறான பாக்களில் பயன்படுத்தியிருக்கக் கூடும் என்பதைக் கண்டறிவது மேலாய்வாகும். இதனுடன் தூக்கும் பாடுபொருளும் என்கிற கோணத்தில் பார்க்கபட வேண்டும் என்பதையும் இக்கட்டுரை வலியுறுத்துகிறது.

**துணைநூற் பட்டியல்**

[1]. **ஆலிஸ்.அ**., 2004, பதிற்றுப்பத்து மூலமும் உரையும், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

[2]. **சங்கர நமச்சிவாயர்**., 1991., நன்னூல் மூலமும் உரையும், சென்னை, டாக்டர் உ.வே.சா

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07032026.03*

நூல்நிலையம்.

[3]. **சம்பத். இரா.,** 1998, இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் மரபுக்கவிதை யாப்பியல்: மரபும் நெகிழ்வும், புதுச்சேரி, புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்.

[4]. **சிவலிங்கனார். ஆ**., 1998., தொல்காப்பியம் உரைவளம் பகுதி - 1பொருளதிகாரம் செய்யுளியல், சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

[5]. **தமிழண்ணல்.,** 2003.,தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி -3, சென்னை., மணிவாசகர் பதிப்பகம்.

[6]. **திருஞானசம்பந்தம்.ச**., 2018., தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், திருவையாறு, கதிர் பதிப்பகம்.

[7]. **பழனிவேலு.கே**., 2018., தொல்காப்பியத் திணைக் கோட்பாடு: திறனாய்வியல் நோக்கு, சென்னை, மாற்று வெளியீட்டகம்.

[8]. **பாலசுந்தரம். ச**., 2012., தொல்காப்பியம் (தொகுதி – 3, பகுதி-3) பொருளதிகாரம் ஆராய்ச்சிக் காண்டிகையுரை செய்யுளியல், மரபியல், சேலம், பெரியார் பல்கலைக்கழகம்.

[9]. **மணி. ஆ**., 2022., தொல்காப்பியம் பொருண்மை நோக்கு பதிப்பு: கூற்று, புதுச்சேரி, தமிழன்னை ஆய்வகம்.

[10]. **விசுவநாதன்.அ.,** 2004, கலித்தொகை மூலமும் உரையும் , சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

[11]. தொல்காப்பியச் செய்யுளியல் முழுப்பார்வை, செ.வை. சண்முகம், 2015, தொல்காப்பியக் கவிதையியல் வடிவம், பாடுபொருள், உத்தி, வகைமை, இரா. சம்பத் (ப.ஆ), புதுச்சேரி, புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், பக் 548-551

[12]. தொல்காப்பியச் செய்யுளியலும் மையஈர்ப்பும், பெ.மாதையன், 2015, தொல்காப்பியக் கவிதையியல் வடிவம், பாடுபொருள், உத்தி, வகைமை, இரா. சம்பத் (ப.ஆ), புதுச்சேரி, புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், பக் 596-606

*Copyright © 2026 Tamilmanam International Research Journal of Tamil Studies, All rights reserved.*